ஆட்கடத்தலை அடையாளம் காண்பது எப்படி

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த எவரேனும் ஒருவர்:

- பணியமர்த்தலின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த தவறான வாக்குறுதிகளின் கீழ் வேலைக்கு சேர்க்கப்பட்டாரா
- வேலையில் சேர்வதற்கு அளவுக்கதிகமான கட்டணம் செலுத்தியுள்ளாரா
- உணவு, தங்குமிடம் அல்லது மற்ற அடிப்படைத் தேவைகள் இல்லாமல் தவித்தாரா
- உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டாரா அல்லது கடத்திச்செல்லப்பட்டாரா

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த எவரேனும் ஒருவர்:

- அடையாள ஆவணங்கள் அல்லது பிற மதிப்புமிக்க சொந்த உடைமைகள் பறிமுதல் செய்யப்படும் அல்லது கொடுக்க மறுக்கப்படும் நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளாரா
- சம்பளம் நிறுத்தி வைக்கப்படும் அல்லது சம்பளம் அளிக்கப்படாமல் இருக்கும் நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளாரா
- கடனாளியாக ஆகத் தூண்டும் அளவுக்கு சம்பளங்களில் விளக்கம் அளிக்கப்படாத அல்லது அளவுக்கதிகமான பிடித்தங்கள் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளாரா
- வேலை செய்யுமிடத்திலோ அல்லது அத்துடன் தொடர்புடைய இடங்களிலோ சிறைவைப்பை அல்லது உடல்ரீதியான தடுப்புக்காவலை அனுபவிக்கிறாரா, எ-கா., பணியளிப்பவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் குடியிருப்புகள்
- அளவுக்கதிகமான வைப்புத் தொகையை அல்லது “பிணைத்” தொகையை செலுத்துகிறாரா
- உடல்ரீதியான அல்லது பாலியல் ரீதியான துன்புறுத்தலையோ, தொல்லைகளையோ அல்லது உளவியல் ரீதியான அச்சுறுத்தலையோ அனுபவிக்கிறாரா
- இடம்விட்டு இடம் நகர்வதற்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும் நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளாரா

எங்களால் உதவ முடியும்.

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த எவரேனும் ஒருவர் இதில் எதையேனும் அனுபவித்துள்ளார் எனில், தயவுசெய்து FOTL’ன் பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கான துறையை (கார்பொரேட் சோசியல் ரெஸ்பான்சிபிலிட்டி டிபார்ட்மெண்டை) +1 270-935-2588 எனும் தொலைபேசி எண் வாயிலாகவோ அல்லது code@fotlinc.com எனும் மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்புகொள்ளவும்.

FRUIT OF THE LOOM Bestform BVD SPALDING RUSSELL ATHLETIC VANITY FAIR JERZEES